செய்வதற்குரிய முயற்சிகளை விரைந்து எடுப்பதோடு, சாலைகளைச் செப்பனிட்டு, கிராமப்புற சாலைகளை எல்லாம் இணைத்து, மக்கள் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த ஆட்சியிலே செய்வார்கள் என்ற மிகுந்த நம்பிக்கையோடு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றிற்கான நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே பணிவோடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, முடிக்கின்றேன், வணக்கம்.

6. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

காவிரி நதிநீர் பங்கீடுப் பிரச்சினை குறித்து கர்நாடக முதல்வரோடு தமிழக முதல்வர் சென்னையில் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சநீதிமன்றத்தின் விருப்பத்திற்கேற்ப நானும், கர்நாடக முதலமைச்சர் அவர்களும் இன்று காலையில் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினோம். இந்தப் பேச்சுவார்த்தை பரஸ்பரம் நட்புணர்வோடு நடைபெற்றது. இதன் விளைவாக உடனடி இடைக்கால நிவாரணமாக தமிழகம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநில விவசாயிகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையில் காவிரித் தண்ணீரை இரு மாநிலங்களுக்கும் பயனளிக்கும் வண்ணம் பகிர்ந்து உபயோகித்துக் கொள்வது என்றும், இரு தரப்பினரின் தேவைகளையும் ஈடுசெய்யும் வகையை மனதில் கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்நாடக மாநிலத்திற்கு வந்து தொடர்ந்து இதுபற்றிப் பேச கர்நாடக முதலமைச்சர் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அந்தச் செய்தியையும் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து, அந்தப் பயணம் ஆகஸ்டு 15-க்குப் பிறகு இருக்கக்கூடும் என்பதையும் அறிவிக்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சொக்கர்.

1996 ஆகஸ்டு 5]

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்தப் பிரச்சினையில் உரிய அணுகு முறையைக் கடைப்பிடித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களும் பேசி, இரு மாநிலத்தினுடைய விவசாயிகளும் பாதிக்கப்படாத வண்ணம் முடிவு எடுத்தமைக்காக தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. என். பாண்டுரங்கன்.

திரு. என். பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே உரையாற்றுகிற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தித் தந்த (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். திரு. லத்தீப், அப்புறம் பேசுங்கள் – (குறுக்கீடு) திரு. ம. அப்துல் லத்தீப்.

திரு. ம. அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். நான் எங்களுடைய கட்சியின் சார்பாக மட்டுமல்ல, இந்த அவையில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பில் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக சிக்கலாக இருக்கிற ஒரு பிரச்சினையில் ஆக்கபூர்வமான அணுகு முறையை மேற்கொண்டு, தீர்வு அளிக்கின்ற ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்ற, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

[1996 ஆகஸ்டு 5

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினையில், கர்நாடக அரசும், தமிழக அரசும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்துவது நல்லதுதான். பேச்சுவார்த்தை, பேச்சு வார்த்தை என்று அவர்கள் இஷ்டம்போல் அவர்களுடைய போக்கிற்கு விட்டுவிடக் கூடாது. நமக்கு வெற்றி கிடைக்கவேண்டும். வெற்றி என்றால், நியாயப்படி நடுவர் மன்றத் தீர்ப்புப்படி நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ஆனால் இரு மாநிலங்களுக்கும் தண்ணீர் தாவா பிரச்சினை ஏற்பட்டதால், அதைத் தீர்க்கக்கூடிய ஒரு 1956-ஆம் ஆண்டைய சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். நடுவர் மன்றத் தீர்ப்புப்படி, பேச்சு வார்த்தை இருக்க கூடாது. சட்டப்படியாக ஆக்கபூர்வமாக செயல்படுத்தக்கூடிய நடவடிக்கையாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, பேச்சு வார்த்தை என்று பேசிக் கொண்டே இருக்கக் கூடாது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழினத் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டுக்கு நல்லதுதான் செய்வார் என்றே நினைக்கிறேன். நிச்சயமாக அது நடக்கத்தான் போகிறது. ** (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, பேச்சு வார்த்தை சுமுகமாக நடந்து கொண்டிருக்கும்போது, கர்நாடக அரசைப் பற்றி இங்கே சொல்லப்பட்ட இந்த வார்த்தைகளை எடுத்துவிடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வாய்ப்பை எனக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறீர்களே. சுமுகமாகப் பேசி முடித்து இருக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன பிறகு, அந்த அரசைக் குறை சொல்வது சரியல்ல. உறுப்பினரே பேசியவைகளைத் திரும்பப் பெறவேண்டும். அந்த வார்த்தையை நீங்களே திரும்பப் பெற்றுவிடுங்கள். திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: நான் கர்நாடக அரசைப் பற்றிப் பேசியவைகளைத் திரும்பப் பெறுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விடாப்பிடியாக கர்நாடக அரசினுடைய முதல்வர் அவர்களிடம் பேசி, நிச்சயமாக வெற்றி பெற வேண்டும். வெற்றி பெற அ.இ.அ.தி.மு.க சார்பில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1996 ஆகஸ்டு 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கர்நாடக அரசைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன். திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

*** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு எந்த வகையிலும் இடைஞ்சல் இல்லாமல், அவர்கள் பேசிக் கொண்டிருக்கிற அந்தப் பேச்சு வார்த்தைகளுடைய வெளிப்பாட்டைச் சொல்கிறபோது, இரண்டு மாநில விவசாயிகளையும் பாதிக்காத வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே அனைத்துக் கட்சிகளின் சார்பாக மட்டுமல்லாமல், இந்தத் தமிழகத்தினுடைய அனைத்து மக்களின் சார்பாகவும் நன்றியையும், பாராட்டுகளையும், இந்தப் பேச்சு வார்த்தை சிறப்பாக வெற்றி பெற வேண்டுமென்று தெரிவித்து முடிக்கிறேன்.

பிற்பகல் 12-35

*** திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர், சோழ மண்டலத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் துயரங்களைத் துடைக்கின்ற அளவுக்குக், கர்நாடக மாநில அரசோடு சிறந்த ஒரு பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மக்கள் எல்லாம் பாராட்டுகின்ற வகையிலே நல்ல தித்திப்பான செய்தியைக் கொடுத்து இருக்கின்ற இந்த நிலையை அகில இந்திய பார்வேர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே உளப்பூர்வமாகப் பாராட்டுவதோடு முதல்வர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக மாநில விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை பயக்கின்ற வகையிலே நம்முடைய மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே மிக ஆழமாகத் தலையிட்டு தமிழக மக்களுக்கு உரிய பாதுகாப்பைத் தருகின்ற வகையிலே சுமுகமான பேச்சுவார்த்தை நடத்தி, அது வெற்றி பெற வேண்டும் என்று மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மக்களின் நலன் சிறிதும்கூட பாதிக்கப்படாத வகையில் இன்று இரு முதல்வர்களும் - டாக்டர் கலைஞர் அவர்களும், கர்நாடக முதல்வரும் - நடத்திக் கொண்டிருக்கக்கூடிய பேச்சுவார்த்தை வெற்றி பெற தேவேந்திரகுல வேளாளர் சங்கத்தின் சார்பிலே வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

Thiru B. Venkatasamy: Hon. Speaker Sir, on behalf of Janata Dal, I thank the Hon.Chief Minister of Tamil Nadu for taking appropriate and timely action to release water from Karnataka. I really thank the Hon. Chief Minister and the Minister for Public Works for taking timely decision. Thank you very much.

5. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாண்டுரங்கன்.

***திரு. என். பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே முதன்முதலாக உரையாற்றுகிற நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த, காவிரி நீரைப் பெற்றுத் தந்த தமிழினத்தின் தானைத் தலைவர், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும் பெரணமல்லூர் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான வணக்கத்தையும் நன்றியையும் முதற்கண் தெரிவித்துக்கொண்டு, இந்த சாலை மற்றும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையிலே உரையாற்றுவதிலே நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது முதன் முதலான கோரிக்கையைப் பரிவுடன் கவனித்து ஆவன செய்வார் என்று கருதுகிறேன். பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்து திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு அன்னை அஞ்சுகம் போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு புதிய போக்குவரத்துக் கழகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.